# இரண்டாம் மொழி ஆங்கிலத்தை கற்பதில் தோட்டப் பாடசாலை மாணவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள்: கெ.தெஹி. பனாவத்த தமிழ் வித்தியாலயத்தை மையப்படுத்திய ஆய்வு

# Challenges Faced In Learning English As A Second Language In Estate School With Special Reference Panavatha Tamil Vidyalaya

SM.Hakeema Beevi[1], MNF. Fasmila[2], AK.Siyana[3]

[1,2]Assistant lecturer, Depart of Islamic Studies, South Eastern University of Sri Lanka
hakee97693@gmail.com, aksiyana94@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

மனிதனை அடையாளப்படுத்திக் காட்டும் முக்கிய விடயங்களில் ஒன்றாக மொழி காணப்படுகின்றது. அந்தவகையில் உலகின் சர்வதேச மொழியாக ஆங்கிலம் காணப்படுகின்றது. உலகில் பல நாடுகளில் இம் மொழியானது கல்வியல் ரீதியில் பாரிய செல்வாக்குப் பெற்றுக் காணப்படுகின்றது. இலங்கையிலும் ஆங்கில மொழியானது இரண்டாம் மொழியாக பார்க்கப்படும் அதே வேளை கல்வி மற்றும் நிர்வாக சேவையில் இது பாரிய செல்வாக்கு பெற்றுள்ளது. பாடசாலை ரீதியல் ஒரு பாடவிதானமாக காணப்படுகின்றது. எனினும் கல்வியில் முன்னேற்றத்தை ஏற்படுத்துவதில் சமூக, பொருளாதார மற்றும் பாடசாலை சூழல் என்பன செல்வாக்குச் செலுத்துகின்றன. எனவே இவ் ஆய்வானது ஆங்கிலக் கல்வி கற்பதில் மாணவர்கள் எதிர் நோக்கும் சவால்களை கண்டறிந்து மாணவர்களின் ஆங்கிலக் கல்வி அடைவு மட்டம் உயர்வதற்கும் பாடசாலை அபிவிருத்திக்கும் வழிகோருகின்றது. தோட்டப்பகுதியில் அமைந்துள்ள கெ.தெஹி பனாவத்த தமிழ் வித்தியாலயத்தில் 6-9 தர மாணவர்களில் 50 பேருக்கு அளவியல் வினாக் கொத்து வழங்கப்பட்டதுடன் குறித்த பாடசாலையின் அதிபர், ஆசிரியர் குழாம் ஆகியோருடன் மேற்கொள்ளப்பட்ட நேர்காணலின் மூலமாகவும் முதலாம் நிலைத் தரவுகள் மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகள் பெறப்பட்டு விபரண முறைகளின் அடிப்படையில் இவ்வாய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது. இறுதியாக, பெற்றோர்களின் ஆர்வமின்மை மாணவர்கள் கற்றலின் ஆர்வமின்மை, பொருளாதார பிரச்சினை, பாடசாலை நிர்வாக ஒழுங்கின்மை, கற்றல் கற்பித்தல் குறைபாடு, பகுதி நேர வகுப்புக்களில் சமூக உதவிகள் கிடைக்காமை, ஆங்கிலக் கல்வியை நகரப் புறங்களுக்கு சென்று கற்பது கடினம், பிரயாணச்செலவு, கல்வி கற்பதற்கான சூழலின்மை, பெற்றோர் கல்வி அறிவு போதாமை போன்ற விடயங்கள் தோட்டப் பாடசாலை மாணவர்கள் ஆங்கில மொழியை கற்பதில் மாணவர்கள் எதிர்கொள்ளும் சவால்களாக முடிவுகள் பெறப்பட்டுள்ளன. இவற்றை நிறைவு செய்யும் முகமாக அமைச்சு வளமான ஆசிரியர்ளை இப்பகுதி பாடசாலைகளுக்கு வழங்குவதுடன் ஏனைய பகுதிகளைப் போன்று இப்பாடசாலைகளிலும் குறைகளை நிவர்த்தி செய்யவேண்டும். பெற்றோர்களுக்கு ஆங்கிலக் கல்வியில் ஆர்வத்தை ஏற்படுத்தும் வகையில் கருத்தரங்குகள் ஏற்பாடு செய்யப்பட்டு விழிப்புணர்வு நடாத்துதல், ஆங்கிலக் கல்வியின் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறல், சமூக நிதி உதவிகளை ஏழை மாணவர்களுக்கு பெற்றுக்

கொடுத்தல், பாடசாலை நிர்வாகத்தை மறுசீரமைப்புக்கு உட்படுத்தல் போன்றவற்றோடு மேலும் சில விடயங்களும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளன.

**திறவுச் சொற்கள்:** ஆங்கில மொழி, தோட்டப்புறம், பற்றாக்குறை, குறைவிருத்தி பகுதி

## 1. ஆய்வின் அறிமுகம்

உலகின் இருப்பிற்கும் வளர்ச்சிக்கும் இன்றியமையாதது கல்வியாகும். எச்சமூகத்திடம் கல்வி இல்லையோ அச்சமூகம் அறியாமைக்கு அத்திவாரமாக அமைந்து விடும். அந்த வகையில் கல்வியின் அடிப்படை குறிக்கோள் உடல், உள்ளம், மெய்ப்பாடு, ஒழுக்கம் என்பன ஒன்றிணைந்த ஒரு முழு மனிதனை உருவாக்குதல் ஆகும். தற்போது உலகில் ஒரு பில்லியன் மக்கள் எழுதவோ, வாசிக்கவோ அறியாத வகையில் அதாவது 1 – 6 பங்கினர் எழுத்தறிவிலிகளாகவுள்ளனர். வளர்முக நாடுகளில் 130 க்கும் அதிகமான பள்ளிப் பருவத்தினர் கல்வி வசதியின்றி உள்ளனர். பல மில்லியன் கணக்கானோர் தரம் குறைந்த கல்வியினால் பாதிக்கப்படுகின்றனர்(DanielV, 2007).

எவ்வாறாயினும் இலங்கையைப் பொறுத்தமட்டில் 1978 ஆண்டு நடைமுறையில் இருக்கும் அரசியல் யாப்பின் உறுப்பினர் 27ம் எழுத்தறிவின்மையை முழுவதும் ஒழிப்பதும் அனைத்து மக்களுக்கும் பரவலான மற்றும் சமமான கல்வியை எல்லா மட்டங்களிலும் பெறுவதற்கான உரிமையை உறுதிப்படுத்துவதுமாகும். இவற்றின் விளைவாக 2016 ம் ஆண்டு தரவுகளின்படி எழுத்தறிவு வீதம் 93.2% ஆகும். அரசாங்கம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2% தினை கல்விக்காக செலவிடுகின்றது. இருப்பினும் இலங்கையில் சுமார் நான்கு மில்லியன் பாடசாலை மாணவர்களும் 215000 ஆசிரியர்களும் மற்றும் பாடசாலைகளும் காணப்படுகின்றது. இன்று இலங்கையில் மும்மொழி கற்கையினை அடியொட்டியதாக கல்வி நடவடிக்கைகள் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன. அதிலும் குறிப்பாக ஆங்கில மொழியானது இரண்டாம் மொழியாக நாட்டில் கருதப்படுவதுடன் முக்கிய மொழியாவும் காணப்படுகின்றது. இம்மொழி பாடசாலைகளில் ஒரு பாடமாகவும் கற்பிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இருப்பினும் பாடசாலைகளில் இம்மொழிப் பாடங்கள் பற்றாக்குறையான தன்மையிலே காணப்படுகின்றன. (தினகரன், 2013).

அதனடிப்படையில் ஆங்கில மொழியை கற்பதில் லயப்பாடசாலை அல்லது தோட்டப்பகுதிகளில் அமைந்துள்ள பாடசாலை மாணவர்கள் எவ்வாறான சவால்களை எதிர்கொள்கின்றார்கள் என்பதை கண்டறிவது இவ்வாய்வின் நோக்காக அமைந்துள்ளதுடன் ஆய்வுப் பிரச்சினையை நோக்கின் ஆங்கில மொழியை கற்பதில் அல்லது அறிந்து கொள்வதில் ஓர் அலட்சிய போக்கு காணப்படுவதுடன் மாணவர்களின் தேவைகள் ஆளுக்காள் வேறுபடும் தன்மையும் மாணவர்களின் தனியாள் வேறுபாடுகளுக்கமைவாகவும் காணப்படும் நிலையில் ஆசிரியர்களின் கற்பித்தல் நடவடிக்கைகள் அனைவரது தேவைகளையும் பூர்த்தி செய்வதாக அமையாது. இச் சூழலில் மாணவர்கள் (உ/த) பரீட்சை எழுதுகின்றனர். க.பொ.த (சா/த) முடித்து சித்தியடைபவர்கள் க.பொ.த (உயர் தரத்திற்கு செல்வார்கள், எனினும் அவர்களில் அனைவரும் ஆங்கில மொழியிலோ அல்லது

கல்வியிலோ பரீட்சையமுடையவராக காணப்படுவதில்லை. இதன் பின்னர் க.பொ.த (உ/த) முடித்தவர்களில் சிலர் பல்கலைக்கழகத்திற்கும் பலர் அனுமதி கிடைக்காமல் தொழிலுக்காக வேறு கல்வி நடவடிக்கைகளை தொடர்வார்கள். இந்த இரண்டு கட்டங்களிலும் ஆங்கிலமானது மிக முக்கிய விடயமாக காணப்படுகிறது. பொதுவாக உயர் கல்விகளும் ஆங்கில மொழி மூலமாகவே இன்று கற்பிக்கப்படுகின்றன. இச் சூழலில் பின் தங்கிய பகுதிகளில் காணப்படும் பாடசாலையில் உள்ள மாணவர்களுக்கு ஆங்கில பாடத்தைக் கற்று தொழிலைப் பெறுவதற்கான சந்தர்ப்பம் அரிதாகவே காணப்படக்கூடியதாக அமைந்துள்ளது இது ஆய்வு பிரச்சினையாகக் கொள்ளப்படுகின்றன.

அந்தவகையில் கேகாலை மாவட்டத்தில் எட்டியந்தோட்டை பிரதேசத்தில் அமைந்துள்ள பனாவத்தை எஸ்டேடில் காணப்படும் கெ.தெஹி பனாவத்த தமிழ் வித்தியாலய மாணவர்களை மையப்படுத்தியதாக இவ்வாய்வு அமைந்துள்ளது. இப்பாடசாலையில் முதலாம் தரம் தொடக்கம் ஒன்பதாம் தரம் வரை சுமார் 250 பிள்ளைகள் கல்வி கற்கின்றனர். இலங்கையின் தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்களில் பொதுக் கல்வியின் பிரதானமாக தமிழ் பேசும் தொழிலாளர்கள் முகம்கொடுக்கும் மோசமான சமூக நிலைக்கு ஓர் உதாரணமாகும். தொழிலாளர் வர்க்கத்தில் மிகவும் ஒதுக்கப்படும் தரப்பினர் தோட்டத் தொழிலாளர்ளே. கூடுதலான தோட்டத் தொழிலாளர்கள் இன்னும் லயன் அறைகள் என்றழைக்கப்படும் குறுகலான வீட்டுத்தொதியிலேயே வசிக்கின்றனர். இவற்றில் பல பிரிட்டிஸ் காலனித்துவ காலத்தில் கட்டப்பட்டவையாகும். ஒரு தொழிலாளியின் ஒரு மாத வேதனம் சுமார் 6000 ரூபாவாக இருப்பதோடு இது உற்பத்தியுடன் பிணைக்கப்பட்டும் உள்ளது. பாடசாலைகள், வீதிகள், சுகாதார பராமரிப்பு, போக்குவரத்து போன்ற அத்தியவசிய சேவைகளும் உட்கட்டமைப்பு தோட்டப்பகுதியில் மட்டுப்படுத்தப்பட்டவையாக உள்ளன. அளவுக்கு மிஞ்சி வேலையின்மையும் இங்கு காணப்படுகின்றது. (Inadequate schooling in srilanka's plantations, 2009)

மேலும் தோட்டப் பிரதேசங்களில் உள்ள பாடசாலைகள் அதிகமாக சர்வதேச உதவிகளிலேயே தங்கியுள்ளன. சுவிஸ் நிறுவனமான சிடாவினால் 1986 ஜூலையில் பெருந்தோட்டப் பாடசாலைகளுக்கு கல்வி அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 1986 க்கும் 1991 க்கும் இடையில் 2,052 ஆசிரியர்கள் புதிதாக இணைக்கப்பட்டார்கள். எவ்வாறாயினும் அந்த உதவிகள் பெற்ற பாடசாலைகள் தரக்குறைவாக பராமரிக்கப்பட்டன. (Inadequate schooling in srilanka's plantations, 2009). எனவே பல்வேறுபட்ட குறைபாடுகளைக் கொண்ட தோட்டப்பகுதி தமிழ் மாணவர்கள் இரண்டாம் மொழி ஆங்கிலத்தை கற்பதில் எவ்வாறான சவால்களை எதிர்கொள்கின்றார்கள் என்பதை கண்டறியும் முகமாக இவ்வாய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

## 2. **இலக்கிய மீளாய்வு**

சமரசிங்க குணசேகர (1998), என்பவரது ஆய்வில் குடும்பத்தில் தோன்றும் சில பிரச்சினைகளுக்கு பிள்ளைகளின் கல்வி அறிவு பிரதான இடம் வகிப்பதாக குறிப்பிடுகின்றது. சிலர் பெற்றோரை பிரிந்து வாழ்கின்றனர், சிலர் பெற்றோர் வெவ்வேறு மதத்தை


ISBN 978-624-5736-14-0

சேர்ந்தவர்களாக இருக்கின்றனர், தந்தையர் மதுப்பழக்கத்துக்கு ஆளாகியுள்ளார், சில தாய்மார் பல்வேறு அபாயகரமான விபச்சாரம் போன்ற தொழில்களில் ஈடுபடுகின்றனர். தந்தையாலும், தந்தையின் குடிகார நண்பர்களாலும் பெண் பிள்ளைகளுக்கு பாலியல் தொந்தரவுகள் ஏற்படுத்தப்படுகின்றன. பிள்ளைகளின் கல்விக்கும், நல்வாழ்வுக்குமான குடும்பச் சூழல் காணப்படுவதில்லை. இவை போன்ற சமூக பொருளாதாரக் காரணிகள் கல்வியைப் பாதிக்கின்றன எனக் குறிப்பிடுகின்றார்.

சேதுராஜா செ (2005), என்பவரது ஆய்வில் இலங்கையின் வடக்கு, கிழக்கு பகுதிகளில் கல்வி நடவடிக்கை ஏனைய பகுதிகளை விட பின்தங்கிய நிலையில் இருப்பதுடன் பாரபட்சமான பாகுபாட்டினையும் அனுபவித்து வருகின்றன. திறமைக்கும், தகுதிக்கும் முதலிடம் கொடுத்தும், இவற்றில் முதலிடம் வகித்தும் மக்கள் இன்று இவற்றில் பின்தங்கி இருப்பதற்கான காரணங்களாக நீண்ட கால போர்ச்சூழல், புத்திஜீவிகள், கல்விக் கரிசனையாளர்களது வெளியேற்றம், புலம் பெயர்ந்த மக்களது உழைப்புக்களின் உட்பாய்ச்சல், பாடசாலைகளின் வினைத்திறன் குறைந்து செல்லல் என்பன அமைகின்றன என்று விபரண பகுப்பாய்வின் மூலம் தனது கருத்தை முன்வைத்துள்ளார்.

அனுயா.ச (2007), என்பவரது ஆய்வில் இன்றைய பாடசாலை கல்வி முறையானது மாணவனின் சுயசிந்தனை, ஆக்கத்திறன் வெளிப்பாடு, விருத்தி இவற்றுக்கான சூழலைப் பெருமளவில் வழங்கவில்லை என்றே கூறலாம். இத்தகைய நிலமை மாற்றப்பட்டு மாணவர் ஒவ்வொருவரினதும் சிந்தனை வளர அதன் வழி புதிய ஆக்கங்கள் தூண்டப்பட, வெளிப்பட, வளர்க்கப்பட முடிந்தளவில் பாடசாலை முயற்சிக்க வேண்டும். ஆசிரியரின் பொருத்தமான வழிகாட்டல், தூண்டல் குறிப்பிடத்தக்களவில் மாணவரின் ஆக்கத்திறன் வெளிப்பாட்டிற்கு உதவ முடியும் என்பதை விபரண பகுப்பாய்வு மூலம் கூறியுளள்ார்.

அகவிழி மே (2007), என்ற ஆய்வேட்டில் தற்போதைய சூழலில் மாணவர்கள் சிறந்த பெறுபேற்றினைப் பெறுவதற்காக தனிப்பட்ட முறையில் செலவீடுகளை செய்து வந்துள்ளனர். அதாவது பயிற்சிப் புத்தகங்கள், விசேட வகுப்புக்கள், விசேட வழிகாட்டல்கள் என்றவாறு மாணவர்கள் தமது பெறுபேற்றினை உயர்த்திக் கொள்வதற்காகத் தனிப்பட்ட செலவீடுகளை மேற்கொள்கின்றனர். இதனை விட மாணவர்கள் பாடசாலைக் கல்வியை மாத்திரம் நம்பியிருக்காது, ரீயுட்டரிகள் மூலமான கல்விக்கு மாணவர்களும் சரி, பெற்றோரும் சரி முக்கியத்துவம் கொடுத்து வருகின்றனர்: தனியார் வகுப்புக்களில் கூடுதல் கவனம் செலுத்துகின்றனர்.

இவ்வாறு பல்வேறுபட்ட ஆய்வுகள் மாணவர்களின் கல்வி அடைவு மட்டம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டிருப்பினும், குறை விருத்தியுள்ள பிரதேசங்களில் இரண்டாம் மொழி கற்கைகள் பற்றிய ஆய்வுகள் முன்னெடுக்கபடுவது குறைவே. அந்தவகையில் எட்டியந்தோட்டை பிரதேசத்தினை மையப்படுத்தி காணப்படும் தோட்டப்பாடசலை மாணவர்கள் ஆங்கில மொழியினை கற்பதில் ஏற்படும் சவால்கள் குறித்து எவ்வித ஆய்வுகளும் மேற்கொள்ளப்படவில்லை. இந்தவகையில் இவ்வாய்வு அவ்விடைவெளியினை பூர்த்திசெய்வதாக அமைந்துள்ளது.

**3. ஆய்வுப் பிரச்சினை**

நவீன காலத்தில் ஆங்கிலக் கல்வியின் இன்றியமையாமை மிக மிக ஆழமாக உணரப்படுகின்றது. இன்று சர்வதேச மொழியாக மதிக்கப்படும் ஆங்கில மொழியின் செல்வாக்கு கல்வி நிர்வாக சேவையில் பாரியளவு செல்வாக்கு செலுத்துகின்றது. பல்லின மத, மொழி பேசும் ஒரு நாட்டில் 'பொது மொழி' மிக அவசியமாகும்.(மயூறினி வெலிச்சோர், 2020)

ஆங்கிலப் பாடமானது ஏனைய பாடங்களுடன் ஒப்பிடும் போது மிகக் குறைந்த அடைவு மட்டத்தையும் குறைந்த தரத்திலான பெறுபேறுகளையும் வெளிக்காட்டுகிறது. ஆங்கிலப் மொழி நீண்ட காலமாக செல்வாக்குப் பெற்று காணப்பட்ட போதிலும் (தரம் 1 – 11 வரை) பரீட்சையில் பெருமளவில் விரும்பப்படாத பாடமாகவே இது கருதப்படுகிறது. பாடசாலைகளிலே சுயமொழி மூலம் கற்பித்தல் தொடங்கிய காலம் முதல் ஆங்கிலம் இரண்டாம் மொழியாகச் சில பாடவேளைகளில் மட்டும் கற்பிக்கப்படுகின்றது. பல்வேறு பாடங்களிலும் அடிக்கடி நடைபெறும் போட்டிகளில் மாணவர்கள் பங்குகொள்வதால் ஆங்கிலத்தை அதிக நேரம் கற்றுத் திறமையை அதிகரிக்க மாணவர்களுக்கு வாய்ப்புகிடைப்பதில்லை. (சுஐப் எப். காசிம், 2013)

பெருந்தேட்டப் பகுதிகளில் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் அடிப்படை வசதிகள் என்பன பெரிதும் பாதிப்புக்குட்பட்டு காணப்படுகின்றன. இந்நிலை அப்பகுதி பாடசாலைகளிலும் அதிகமாக காணப்படுகின்றது. அந்தவகையில் அப்பாடசாலைகளில் ஒவ்வொரு பாடத்தையும் வினைத்திறனாகக் கொண்டு விளைதிறனாகவும் கொண்டு செல்வதில் பாரிய இடையூறுகளை மாணவர்கள் சந்திக்கின்றனர். குறிப்பாக ஆங்கில மொழியை கற்பதிலும் இவ்வாறான நிலையே காணப்படுகின்றது. (Inadequate schooling in srilanka's plantations, 2009)

**4. ஆய்வு வினா**

ஆங்கில கல்வி கற்பதில் லயம் அல்லது பெருந்தோட்டப் பாடசாலை மாணவர்கள் எவ்வாறான சவால்களை எதிர் கொள்கின்றனர்?

**5. ஆய்வு நோக்கம்**

- தோட்டப்புறபாடசாலைகளில் ஆங்கிலக் கல்வி கற்பதில் மாணவர்கள் எதிர் கொள்ளும் சவால்களைக் கண்டறிதல்.
- ஆங்கிலக் கல்வி கற்பதில் மாணவர்கள் எதிர் கொள்ளும் சவால்களுக்கான காரணங்களைக் கண்டறிதல்.

**6. ஆய்வு முறையியலும் தரவு சேகரிப்பு முறைமையும்**

இவ் ஆய்வானது அளவு சார் மற்றும பண்புசார் முறையில் அமையப்பெற்றுள்ளது. இவ் ஆய்விற்கான தரவு சேகரிப்பதற்கு முதலாம் மற்றும் இரண்டாம் தரவு சேகரிப்பு முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. எட்டியந்தோட்டப் பிரதேசத்தில் கெ.தெஹி பனாவத்த தமிழ்

வித்தியாலயத்தில் கல்வி கற்கும் 50 மாணவர்களை தெரிவு செய்து அதில் ஆண் பெண் இருபாலாரும் அடங்கும் வகையில் தெரிவு உள்ளடக்கப்பட்டு 35 பங்குபற்றினர்களிடமிருந்து தரவுகள் பெறப்பட்டுள்ளன. முதலாம் நிலைத்தரவுகளாக வினாக்கொத்துக்கள் ஆய்வுப்பிரதேசத்தினுடைய கெ.தெஹி. பனாவத்த தமிழ் வித்தியாலயத்தினுடைய தரம் 6 – 9 வரை கல்வி கற்கும் மாணவர்கள் எழுமாற்று விகிதத்தில் 50 மாதிரிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களில் 20 ஆண்களும் 30 பெண்களும் ஆக வினாக்கொத்துக்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. இதில் 10 ஆண் மாணவர்களிடமிருந்தும் 25 பெண் மாணவர்களிடமிருந்தும் மொத்தமாக 35 பதிலளிக்கப்பட்ட வினாக்கொத்துக்கள் மீளப்பெறப்பட்டதுடன் கெ.தெஹி பனாவத்த தமிழ் வித்தியாலயத்தில் வித்தியாலய அதிபர் மற்றும் 3 ஆசிரியர்களிடம் நேர்காணல் மேற்கொண்டு ஆய்விற்கான தரவுகள் பெறப்பட்டு பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டன. மேலும் இரண்டாம் நிலைத் தரவுகளாக தெஹியோவிட்ட வலயக் கல்வி திணைக்களத்தின் ஆவணங்கள், புள்ளி விபரங்கள், நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள் மற்றும் இணையத்தளம் என்பவற்றிலிருந்து தரவுகள் பெறப்பட்டுள்ளதுடன் இத்தரவுகள் Excell Spread Sheet (Version 2016) மென்பொருளினை பயன்படுத்தி விபரிப்பு புள்ளி விபரனவியல் முறை மூலம் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டு முடிவுகள் பெறப்பட்டன.

## 7. பகுப்பாய்வு மற்றும் கலந்துரையாடல்

### 7.1 தோட்டப்பாடசாலைகளில் ஆங்கில மொழி கற்பதில் மாணவர்ளுக்கு சவாலாக அமையும் காரணிகள் பற்றி பகுப்பாய்வு

இவ்வாய்வானது பெருந்தோட்டப் பாடசாலைகளில் ஆங்கிலக் கல்வி கற்பதில் மாணவர்கள் எதிர்கொள்ளும் சவால்களை கண்டறிதல் எனும் நோக்கத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்விற்கான தரவுகள் வினாக்கொத்து மற்றும் நேர்காணல் என்பவற்றின் மூலம் பெறப்பட்ட தரவுகள் பின்வருமாறு பகுப்பாய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன.


**அட்டவணை : 7.1 தகவல்கள் பெறப்பட்ட மாணவர்களின் (பால்நிலை) விபரம்**

| பால் | பங்குபற்றுனர் எண்ணிக்கை | வீதம் |
|---|---|---|
| ஆண் | 10 | 28% |
| பெண் | 25 | 72% |
| மொத்தம் | 35 | 100% |

**மூலம்: கள ஆய்வு, 2020**

இவ்வாய்வின் நோக்கத்தினை அடைந்துகொள்வதற்காக குறித்த பாடசாலையில் 70 வீதத்திற்கும் அதிகமான (25) பெண் பிள்ளைகளும் 28 வீதமான ஆண் பிள்ளைகளும் பங்குபற்றுனர்களாக காணப்படுகின்றனர். இதனை விளக்கப்படுத்துவதாக மேற்காட்டப்பட்டுள்ள அட்டவணை அமைந்துள்ளது.

**வரைபு: 7.1 ஆங்கில மொழி கற்பதில் மாணவர்கள் காட்டும் ஆர்வம்**





**மூலம்: கள ஆய்வு, 2020**

மொத்த பங்குபற்றுனர்களில் 80 வீதமான மாணவர்கள் ஆங்கில மொழி கற்பதில் ஆர்வம் உள்ளவர்களாக கண்டறியப்பட்டுள்ளனர். 20 வீதமானவர்கள் (07 பேர்) மாத்திரமே ஆங்கில மொழி கற்பதில் ஆர்வமற்றவர்களாக காணப்படுகின்றனர். இங்கு ஆங்கில மொழியை கற்பதற்கான ஆர்வம் அதன் வளர்ச்சியை தூண்டும் முக்கிய காரணியாக காணப்படுகின்றது.

### 7.2 பாடசாலையில் ஆங்கில மொழி ஆசிரியர்கள் தொடர்பான பகுப்பாய்வு

மொழியை கற்பிப்பதில் ஆசிரியர்களின் திறமையும் ஆற்றலும் முக்கியமானதாகும். ஆனால் இங்கு ஆய்வுக்குட்படுத்தப்பட்ட பாடசாலையில் ஆங்கில மொழி ஆசிரியர்கள் பற்றாக்குறையாக காணப்படுகின்றனர் என்பது நேர்காணல் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. அதாவது 250 மாணவர்களுக்கு 1 ஆங்கில பாட ஆசரியர் காணப்படுகின்றார். மேலும் அவர் இலங்கை உயர் தொழில்நுட்ப கல்லூரியில் (SLIATE)பட்டம் பெற்றுள்ளார் என்பதும் நேர்காணல் மூலம் கண்டறியப்பட்டது. மேலும் அவர் திறமையற்ற (ஆங்கில மொழியை கற்பிப்பதில் தேர்ச்சியற்ற) ஆசிரியராக காணப்படுகின்றார். என்பது மாணவர்களுக்கு வழங்கப்பட்ட வினாக்கொத்து பகுப்பாய்வினூடாக பெறப்பட்ட முடிவாகும். பங்குபற்றிய மாணவர்களில் 60 வீதத்திற்கும் அதிகமான (23 பேர்) மாணவர்கள், ஆங்கிலப் பாட ஆசிரியர் திறமையற்றவராக காணப்படுவதாக கூறுகின்றனர். இதனை பின்வரும் வரைபடம் தெளிவுபடுத்துகின்றது.

**வரைபு : 7.2 ஆங்கில மொழி ஆசிரியர்களின் திறைமையை காட்டும் வரைபடம்**





**மூலம்: கள ஆய்வு, 2020**


ISBN 978-624-5736-14-0

இன்று இலங்கையில் மும்மொழி கற்கை நெறியானது மாணவர்களின் கற்றலில் அதீத தாக்கம் செலுத்துவதாக அமைந்துள்ளது. இதற்கு பாடசாலைகளே முதுகெலும்பாக உள்ளன. எனினும் மொழிகளை கற்பிக்கும் ஆசிரியர்களின் திறமை விருத்தியின்றி காணப்படுமிடத்து அது மாணவர்களின் கற்றலில் திருப்தியின்மையை ஏற்படுத்தும். அந்தவகையில் ஆய்வுகுட்படுத்தப்பட்ட பாடசாலையில் ஆங்கில மொழி திறன் குறைவாக காணப்படுவதுடன் இந்நிலை மாணவர்கள் ஆங்கில மொழியை பெற்றுக்கொள்வதில் பாரிய சவாலாக இப்பகுப்பாய்விலிருந்து கண்டறியப்பட்டுள்ளது.

**வரைபு : 7.3 ஆங்கில மொழி கற்பதில் மாணவர்களின் திருப்தி நிலை பற்றிய பகுப்பாய்வு**





**மூலம்: கள ஆய்வு, 2020**

அந்தவகையில், 70 வீதத்திற்கும் அதிகமான மாணவர்கள் பாடசலையில் ஆங்கில மொழி கற்பித்தலில் திருப்தியடையாத அதேவேளை 23 வீதமான மாணவர்களே திருப்தியடைகின்றனர். மாணவர்களின் திருப்தியற்ற இந்நிலையானது மாணவர்கள் ஆங்கில மொழியை கற்பதில் பாரிய தாக்கம் செலுத்துவதாக அமைந்துள்ளது.

மொழிகளை விருத்தி செய்வதில் சூழல் என்பது முக்கியமான ஒன்று. கல்வி கற்பதற்கான சிறந்த சூழல் காணப்படுமிடத்து மாணவர்களின் பெறுபேறு அதிகரிப்பதாக முன்னைய ஆய்வுகள் கூறுகின்றன. (சிந்துஜா பெர்னாண்டல், 2017). குறித்த ஆய்வில் பிள்ளைகள் எதிர்நோக்கும் சவால்கள் பற்றி ஆராயப்பட்ட போது, அதிகமான மாணவர்கள் தங்கள் சூழல், ஆங்கில மொழியை விருத்தி செய்வதில் சவாலாக அமைந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்கள். மேலும் நேர்காணலின் போது 80 வீதமான மாணவர்கள் ஆங்கில மொழியை கற்பதற்கான சூழலை கொண்டிருக்கவில்லை என்பதாக தெரிவித்துள்ளனர்.


ISBN 978-624-5736-14-0


**வரைபு : 7.4 ஆங்கில மொழி கற்றலுக்கான சூழல் பற்றி ஆராய்தல்**




**மூலம்: கள ஆய்வு, 2020**

இன்று அதிகமான பிள்ளைகள் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களை பகுதிநேர வகுப்புக்களுக்கு சென்று பூர்த்தி செய்வது மட்டுமன்றி விருத்தி செய்து கொள்கின்றனர். அதேவேளை ஆங்கில மொழியினை விருத்தி செய்வதற்காக பகுதி நேரங்களை நாடக்கூடியவர்களின் எண்ணிக்கை குறைவாகவே காணப்படுகின்றது. இதனை இவ்வாய்வு, முறையாக வெளிப்படுத்திக் காட்டுகின்றது. இவ்வாய்வுக்கான பங்குபற்றுனர்களில் 15 வீதமான மாணவர்கள் ஆங்கில மொழி கற்கைக்கைகாக பகுதி நேர பாடநெறிகளில் தன்னை உட்படுத்திக் கொள்கின்றனர் என்பது தெரியவந்துள்ளது. எனினும் இப்பிரச்சினைகளை மாணவர்கள் எதிர்நோக்குவதற்கு அவர்களுடைய வருமானப் பற்றாக்குறையானது பாரிய செல்வாக்கு செலுத்துகின்றது. முன்னைய ஆய்வுகளின் முடிவுகளிலிருந்து, உயர்ந்த சமூக-பொருளாதார நிலையினை கொண்டவர்களை விட குறைவான சமூக-பொருளாதாரத்தை கொண்டுள்ள மாணவர்கள் செயற்படும் திறன் குறைவானதாக காணப்படுகின்றமை வெளிக்கொணரப்பட்டுள்ளது(Daniel. V, 2007).

**வரைபு: 7.5 மாணவர்களின் ஆங்கில மொழி ரீதியான பகுதிநேர வகுப்புக்களின் ஈடுபாடு**




**மூலம்: கள ஆய்வு, 2020**

ஏனெனில், பங்குபற்றிய மாணவர்களில் 100% மாவணவர்களினதும் குடும்ப வருமானம் கூலிவேலையினாலே (இறப்பர் தோட்ட வேலை) ஈட்டப்படுகின்றது. இவர்களுள் அனைவரும் 6000 -7000 வரையான மாத வருமானத்தையே பெற்றுக்கொள்கின்றனர். இந்நிலையில் ஆங்கில மொழிக்கு இரண்டாம் முக்கியத்துவம் கொடுக்கும் பெற்றோர்கள் அதனை விருத்தி

செய்வதில் பிள்ளைகளுக்கு ஆர்வம் ஏற்படுத்துவதற்கு எவ்வித வழியையும் ஏற்படுத்தவில்லை என்பதும் இவ்வாய்வினூடாக வெளிப்படுத்தப்படுகின்றது.

**7.5 பெற்றோரின் கல்வி மட்டத்தை கண்டறியும் பகுப்பாய்வு**

பிள்ளையினுடைய கல்வியை தீர்மானிப்பதில் பெற்றோர்கள் கல்வி மட்டம் பாரிய பங்கு வகிக்கின்றது. பிள்ளையானது எதிர்காலத்தில் நற்பிரஜையாகவும், தன்நம்பிக்கையையும் கொண்ட பூரண ஆளுமை மிகு மனிதனாக மிளிர்வதற்கு பிள்ளை மீதான பெற்றோர்களின் கவனிப்பு ஒரு வகை மூலதனமாக அமைகின்றது (பேர்ணாட் .க 1970).

**அட்டவணை :7.2 பெற்றோரின் கல்வி மட்டத்தை கண்டறியும் பகுப்பாய்வு**


| பெற்றோர்களின் கல்வி மட்டம் | பதிலளித்த மாணவர்களின் எண்ணிக்கை | வீதம் |
|---|---|---|
| 1 – 5 வகுப்பு | 28 | 80 |
| 6 – 10 வகுப்பு | 06 | 17.14 |
| கா.பொ.த (ச.த) | 01 | 2.85 |
| கா.பொ.த (உ.த) | 00 | 00 |
| மொத்தம் | 35 | 100% |

**மூலம்: கள ஆய்வு, 2020**

ஆனால் தோட்டப்பாடசாலைகளில் பிள்ளைகளுக்கும் பெற்றோருக்குமிடையிலான கல்வித்தொடர்பு குறைவாகவே காணப்படுகின்றது. ஏனெனில் அப்பகுதி மக்கள் குறைவான கல்வி மட்டைத்தேயே கொண்டுள்ளனர். அதாவது 1 -5 தரத்தில் கற்றவர்களே இப்பகுதியில் அதிகம் (80%) காணப்படுகின்றனர். கா.பொ.த (உ.த) தரத்தில் கற்ற ஒரு பெற்றோரும் இத்தோட்டப் பிரதேசத்தில் அடையாளங்காணப்படாத அதேவேளை 2.85 வீதமானவர்ளே கா.பொ.த (ச.த) தரத்தில் கல்வி பயின்றுள்ளனர். குறைவான பெற்றோரின் குறை கல்வியும் ஏனைய மொழிகளில் தேர்ச்சியற்ற தன்மையும் தோட்டப் புற மாணவர்கள் ஆங்கில மொழியை விருத்தி செய்வதில் பாரிய தடையாக காணப்படுகின்றது. இது மேற்காட்டப்பட்டுள்ள அட்டவணையினூடாக தெளிவுபடுத்தப்படுள்ளன.

பின்தங்கிய பகுதிகளில் அதிகமானோர் கற்றலில் குறைவிருத்தியுடையவர்களாக காணப்படுகின்றனர். இந்நிலையில் பிள்ளைகள் தங்கள் மொழியை வெளிக்காட்டுவதில் இடையூறுகளை எதிர்கொள்கின்றனர். இரண்டாம் மொழியை சமூகத்தில் பயன்படுத்தும் போது ஏனையோர் அவமதிப்புக்குட்படுத்துவதுடன் கேலிக்கைக்கும் உட்படுத்தப்படுகின்றனர். அந்தவகையில் வினாக்கொத்து பகுப்பாய்வில் 60 வீதத்திற்கும் அதிகமான பிள்ளைகள் ஆங்கில மொழியினை வெளிக்காட்டும் போது கேலிக்கைக்கு உட்படுத்தப்படுவதாக குறிப்பிட்டுள்ளனர். இந்தவகையில், ஆங்கில மொழியை விருத்தி செய்வதில் பாரிய சவாலாக இது காணப்படுகின்றது.

**வரைபு: 7.6 மாணவர்களது கேலிக்கைக்கு உட்படுத்தப்படல் செயற்பாட்டினது பகுப்பாய்வு**




**மூலம்: கள ஆய்வு, 2020**

## 8. முடிவுரை

கேகாலை மாவட்டம் எட்டடியந்தோட்ட பிரதேசத்தில் அமைந்துள்ள பனாவத்த எஸ்டேட் பகுதியில் காணப்படும் பாடசாலை மாணவர்கள் ஆங்கில மொழியை கற்பதில் எவ்வாறான சவால்களை எதிர்கொள்கின்றனர் என்பதனை நோக்காகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வானது பல விடயங்களை முடிவுகளாக கொண்டுள்ளது. கற்றலுக்கான உகந்த சூழல் இது ஆங்கிலக் கல்வி அடைவு மட்டத்தில் பாரிய பங்காற்றுகின்றது. இங்கு இச் சூழல் பொருளாதார குறைபாடுகள், பெற்றோர் ஆர்வமின்மை, தனிப்பட்ட குடும்ப பிரச்சினைகள் என்பவற்றை சார்ந்து காணப்படுவதாக முடிவுகள் பெறப்பட்டுள்ளன. பொருளாதார வசதிகள் குறைவடைந்த பிள்ளைகள் பொது நிதித்துறையினாலும் ஆதரிக்கப்படாதவர்களாகவே காணப்படுகின்றனர். கல்வியை நகரங்களுக்கு சென்று கற்பதில் கடினம் இது ஒரு முக்கிய சவாலாக கொள்ளலாம் அந்த வகையில் குறைவான மாணவர்களே நகரங்களுக்கு தேடிச் சென்று கற்பவர்களாக காணப்படுகின்றனர். பாடசாலை ரீதியாக, ஆசிரியர் வளப்பற்றாக்குறை, கற்றல் கற்பித்தலை தேடிச்சென்று கற்பதில் சிரமம், தெரிந்த ஆங்கிலச் சொற்களை பேசும் போது ஏனையோர்களால் கேலிக்கு உட்படுதல் போன்ற சவால்களையும் பெருந்தோட்டப் பகுதிகளில் வாழும் மாணவர்கள் எதிர்நோக்குகின்றனர். இதற்கமைவாக பாடசாலை கல்விச் சூழல், மாணவர்களினது குடும்பங்களது பொருளாதாரச் சூழல், மாணவர்கள் மீதான பெற்றோர்களது கவனயீனம் போன்ற பிரதான காரணிகள் ஆய்வுப்பிரதேச பாடசாலை மாணவர்கள் எதிர்நோக்கும் சவால்களுக்கான காரணிகளாக அமையப் பெற்றுள்ளமை ஆய்வின் கண்டறிதலாகும்.

மேலும் இவ்வாய்வினது பரிந்துரைகளினை நோக்குமிடத்து அமைச்சு வளமான ஆசிரியர்களை இப்பகுதி பாடசாலைகளுக்கு வழங்குவதுடன் ஏனைய பகுதிகளை போன்று இப்பாடசாலையினது குறைகளை நிவர்த்தி செய்யவேண்டும்.ஆசிரியர்கள் கற்பிப்பதற்கு தன்னை தயார்படுத்திக் கொள்வது அவசியமாகும். சிறுபராயத்தில் ஊட்டப்படும் கல்வி சிறப்பாக அமையுமிடத்து அப்பிள்ளையின் எதிர்காலம் சீர்பெறும். அதற்கமைவாக மொழிப்பாட ஆசிரியர்கள் தன் ஆற்றலை வளர்த்துக்கொள்வது அவசியமாகும் மாணவர்களின் கற்றல் ஆர்வத்தை ஏற்படுத்தும் முகமாக விழிப்புணர்வுகளை ஊட்டல்.சமூக நிதி உதவிகளை ஏழை

மாணவர்களுக்கு பெற்றுக் கொடுத்தல்,பாடசாலை நிர்வாகத்தை மறுசீரமைப்புக்கு உட்படுத்தல், கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை தந்திரோபாய திட்டங்களை மேற்கொள்ளல் போன்ற விடயங்களை முன்னெடுத்தல் மற்றும் நடைமுறைப்படுத்துவதுனூடாக லயப்பாடசாலை மாணவர்களின் ஆங்கிலக் கல்வியின் அடைவு மட்டத்தின் வீதத்தினை அதிகரிக்கவும் சிறந்த பெறுபேறுகளை பெற்றுக் கொள்ளவும் முடியும் என்பதனை இவ்வாய்வு பரிந்துரை செய்கின்றது.

**உசாத்துணைகள்**

அருள்மொழி, செ(2016), கல்வியல் ஆய்வு முறைகள், துர்க்கா அச்சகம், முதலாம் குறுக்குத் தெரு, கொக்குவில், மட்டக்களப்பு.

கருணாநிதி, மா(2009), கல்விச் செல்வம், சேம்மடு பதிப்பகம், கொழும்பு

சந்திரசேகரன், சோ(2008), சமகால கல்வி முறைகளின் சில பரிணாமங்கள், பீப்பிள்ஸ், கொழும்பு.

புதிய கல்வி சீர் திருத்த வேலைத்திட்டம், 1998 க.பொ.த (உ.்.த), தேசிய கல்வி ஆணைக்குழு, கல்வி உயர் கல்வி அமைச்சு, தேசிய கல்வி நிருவகம்.

சந்திரசேகரம், சோ.(2006), க.பொ.த (சா/த) பரீட்சையில் இனங்காணப்படும் புதிய குறைபாடுகள், அகவிழி வெளியீடு, சேமமடு பதிப்பகம், கொழும்பு.

ஜெராசா, சபா. (2007) மாணவர்களின் அடைவு பற்றிய மீளாய்வு, பெப்ரவரி அகவழி வெளியீடு, கொழும்பு. ஆய்வுக் கட்டுரைகள்

தனேஸவரன். ம.(2010) மாணவர்களின் வீட்டுச்சூழல் அவர்களின் கற்றல் அடைவில் ஏற்படுத்தும் தாக்கம், கல்வி முதுமானி கற்கை கிழக்குப் பல்கலைக்கழகம்.

பரீட் முகம்மட் றயீஸ், சே. (2011), க.பொ.த (உ/த) பரீட்சையில் அடைவு மட்டத்தை அதிகரிப்பதிலுள்ள பிரச்சினைகள், கல்வி முதுமானிக் கற்கை, கிழக்குப் பல்கலைக்கழகம்.

கணேசன், பெ(2013), க.பொ.த (சா/த) ஆங்கிலப் பாட அடைவு மட்டம் குறைவடைதல் பற்றிய ஆய்வு, கல்வி முதுமானிக் கற்கை நெறி, யாழ்ப்பாண பல்கலைக்கழகம், திருநெல்வேலி.


ISBN 978-624-5736-14-0